## K.J.கீழ முஸ்லிம் மேல்நிலைப்பள்ளி, பரமக்குடி-- இராமநாதபுரம் மாவட்டம்

## பன்னிரண்டாம் வகுப்பு -- பொருளியல்

## இயல் -- ( 6 ) --- வங்கியியல்

**சரியான விடையைத் தெரிவு செய்க**

| | | |
|---|---|---|
| **1)** | ஒருவங்கி என்பது<br>அ) நிதி நிறுவனம் ஆ) கூட்டுப்பங்கு நிறுவனம்<br>இ) தொழில் ஈ) தொண்டு நிறுவனம் | **அ) நிதி நிறுவனம்** |
| **2)** | ஒருவணிக வங்கி செய்யும் பணி<br>அ) வைப்புகளை ஏற்றுக்கொள்வது இ) அ மற்றும் ஆ<br>ஆ) கடன் வழங்குவது ஈ) மேற்சொன்ன ஏதுவுமல்ல | **இ) அ மற்றும் ஆ** |
| **3)** | வணிக வங்கிகளின் பணிகளின் இருபெரும் பிரிவு<br>அ) முதன்மைப் பணிகள்<br>ஆ) இரண்டாம்நிலைப் பணிகள் இ) மற்ற பணிகள்<br>ஈ) மேற்சொன்ன அனைத்தும் | **ஈ) மேற்சொன்ன அனைத்தும்** |
| **4)** | வங்கிக்கடன் என்பது எதைக் குறிக்கிறது?<br>அ) கடன் பணம் ஆ) முன்பணம்<br>இ) கடன் பணமும் முன்பணமும் ஈ) கடன் பெறுதல் | **இ) கடன் பணமும் முன்பணமும்** |
| **5)** | கடன் உருவாக்கம் என்பதன் பொருள்<br>அ) கடனும் முன்பணப் பெருக்கமும்<br>ஆ) வருவாய் இ) செலவு ஈ) சேமிப்பு | **அ) கடனும் முன்பணப் பெருக்கமும்** |
| **6)** | வங்கியல்லா நிதிநிறுவனங்கள் ......................... வைத்திருப்பதில்லை<br>அ) வங்கி உரிமம் ஆ) அரசு ஏற்பு<br>இ) பணச்சந்தை ஏற்பு ஈ) நிதி அமைச்சக அனுமதி | **அ) வங்கி உரிமம்** |
| **7)** | மையவங்கி நாட்டின் ..................... அதிகார அமைப்பு<br>அ) பணவியல் ஆ) நிதியியல்<br>இ) கூலி ஈ) தேசிய வருவாய் | **அ) பணவியல்** |
| **8)** | வங்கிகளின் வங்கி என அழைக்கப்படுவது<br>அ) ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா ஆ) நபார்டு<br>இ) ICICI ஈ) இந்திய ரிசர்வ் வங்கி | **ஈ) இந்திய ரிசர்வ் வங்கி** |
| **9)** | கடைசி நேரத்தில் உதவும் உற்ற நண்பன் என்ற பணியினைச் செய்வது<br>அ) மையவங்கி ஆ) வணிக வங்கிகள்<br>இ) நிலவள வங்கிகள் ஈ) கூட்டுறவு வங்கிகள் | **அ) மையவங்கி** |
| **10)** | வங்கி விகிதம் என்பது<br>அ) முதல்நிலைப் பத்திரங்களை மறுதள்ளுபடி செய்வது<br>ஆ) வட்டி விகிதம் இ) அயல்நாட்டுச் செலாவணி<br>ஈ) வளர்ச்சி விகிதம் | **அ) முதல்நிலைப் பத்திரங்களை மறுதள்ளுபடி செய்வது** |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| **11)** | ரெப்போ விகிதம் என்பதன் பொருள்<br>அ) வணிக வங்கிகள் ரிசர்வ் வங்கிக்கு அளிக்கும் கடனுக்கான வட்டி விகிதம்<br>ஆ) ரிசர்வ் வங்கி வணிக வங்கிகளுக்கு அளிக்கும் கடனுக்கான வட்டி விகிதம்<br>இ) அயல்நாட்டுச் செலாவணி விகிதம்<br>ஈ) நாட்டின் வளர்ச்சி விகிதம் | **ஆ) ரிசர்வ் வங்கி வணிக வங்கிகளுக்கு அளிக்கும் கடனுக்கான வட்டி விகிதம்** |
| **12)** | நெறிமுறைத் தூண்டல் என்பது<br>அ) உத்தமநிலைப்படுத்தல் ஆ) உச்சநிலைப்படுத்தல்<br>இ)தூண்டுதல் நடவடிக்கை ஈ) குறைவுநிலைபடுத்துதல் | **இ) தூண்டுதல் நடவடிக்கை** |
| **13)** | வேளாண் மறுநிதி மேம்பாட்டுக்கழகம் துவங்கப்பட்டது<br>அ) ஜீன் 3,1963 ஆ) ஜீலை 3,1963<br>இ) ஜீன் 1,1963 ஈ) ஜீலை 1,1963 | **ஈ) ஜீலை 1,1963** |
| **14)** | நபார்டு வங்கி எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது<br>அ) ஜீலை 1962 ஆ) ஜீலை 1972<br>இ) ஜீலை 1982 ஈ) ஜீலை 1992 | **இ) ஜீலை 1982** |
| **15)** | ஏற்றுமதி - இறக்குமதி வங்கி துவங்கப்பட்டது<br>அ) ஜீன் 1982 ஆ) ஏப்ரல் 1982<br>இ) மே 1982 ஈ) மார்ச் 1982 | **ஈ) மார்ச் 1982** |
| **16)** | மாநில நிதிக்கழகம் எந்தச் சட்டத்தின்கீழ் துவங்கப்பட்டது?<br>அ) இந்திய அரசு ஆ) தமிழக அரசு<br>இ) ஒன்றியப்பகுதி ஈ) உள்துறை அரசு | **அ) இந்திய அரசு** |
| **17)** | பணவியல் கொள்கையை வடிவமைப்பது<br>அ) கூட்டுறவு வங்கிகள் ஆ) வணிக வங்கிகள்<br>இ) மைய வங்கி ஈ) வெளிநாட்டு வங்கி | **இ) மைய வங்கி** |
| **18)** | நிகழ்நிலை வங்கியகம் என்பது எவ்வாறு அழைக்கப்படுகிறது? அ) இ - வங்கி<br>ஆ) இணைய வங்கி இ) ஆர்.டி.ஜி.எஸ் ஈ) நெப்ட் | **ஆ) இணைய வங்கி** |
| **19)** | ஏ.டி.எம் (ATM) என்பதன் விரிவாக்கம் என்ன?<br>அ) தானியங்கிப் பணம் வழங்கும் இயந்திரம்<br>ஆ) சரிசெய்துப் பணம் வழங்கும் இயந்திரம்<br>இ) தானாகப் பணம் வழங்கும்முறை<br>ஈ) எந்த நேரமும் பணம் (Any Time Money ) | **அ) தானியங்கிப் பணம் வழங்கும் இயந்திரம்** |
| **20)** | 2016 இல் பணமதிப்பு நீக்கம் எந்தெந்த மதிப்புப் பணங்களுக்கு ஏற்படுத்தப்பட்டது?<br>அ) ₹ 500 மற்றும் ₹ 1000<br>ஆ) ₹ 1000 மற்றும் ₹ 2000<br>இ) ₹ 200 மற்றும் ₹ 500<br>ஈ) மேற்சொன்னவை அனைத்தும் | **அ) ₹ 500 மற்றும் ₹ 1000** |

www.Padasalai.Net

<table>
<tr><td colspan="3">இரண்டு மதிப்பெண் வினா -- விடை</td></tr>
<tr><td rowspan="1">21)</td><td colspan="2">வணிக வங்கிகள் என்பதனை வரையறு.<br>* மக்களிடமிருந்து வைப்புகளைப்பெற்று, பேரளவில் உற்பத்தி செய்வோர், பெரிய நிறுவனங்களுக்கும், நடுத்தர நிறுவனங்களுக்கும் கடனை அளிக்கும் நிதி அமைப்பு.</td></tr>
<tr><td>22)</td><td colspan="2">கடன் உருவாக்கம் என்றால் என்ன?<br>* கடன்களையும் முன்பண அளிப்பினையும் அதிகரிக்கும் ஒருசெயல்.<br>* மொத்தப் பண அளிப்பில் கடன்பணத்தின் அளவினை அதிகரிப்பது.</td></tr>
<tr><td>23)</td><td colspan="2">மைய வங்கி என்பதனை வரையறு.<br>* அரசின் பணம், பண அளிப்பு, வட்டி விகிதம் ஆகியவற்றை மேலாண்மை செய்யக்கூடிய, வணிக வங்கிகளை மேற்பார்வையிடக்கூடிய ஒருநிறுவனம்.</td></tr>
<tr><td rowspan="3">24)</td><td colspan="2">CRR மற்றும் SLR ஆகியவற்றினை வேறுபடுத்துக.</td></tr>
<tr><td>CRR ( ரொக்க இருப்பு விகிதம் )</td><td>SLR ( சட்டப்படியான நீர்மை விகிதம் )</td></tr>
<tr><td>வணிக வங்கிகள் தங்கள் வைப்புகளில் ஒருகுறிப்பிட்ட சதவிகிதத்தை மைய வங்கியில் இருப்பாக வைக்கவேண்டும்.</td><td>வணிக வங்கிகள் தங்கள் வசம் வைத்திருக்கவேண்டிய நீர்மைச் சொத்துகளின் விகிதம்.</td></tr>
<tr><td>25)</td><td colspan="2">வெளி அங்காடி நடவடிக்கை என்பதன் பொருள் கூறு.<br>* மைய வங்கி, பொதுச்சந்தையில் அரசின் கடன் பத்திரங்களையும், தகுதிவாய்ந்த தனியார் நிறுவனப் பத்திரங்களையும் வெளியிடுவதும் திரும்பப் பெறுவதும் ஆகும்.</td></tr>
<tr><td>26)</td><td colspan="2">கடன் விநியோகப் பகிர்வு என்றால் என்ன?<br>* நாட்டின் பணஅளிப்புச் சூழ்நிலைக்கேற்பக் கடன் நோக்கங்களைப் பட்டியலிட்டு வரையறை செய்து கடன் கட்டுப்பாட்டினை ஏற்படுத்துவது.<br>* அவை 1) மாறும் தொகுப்பு வரையறை<br>2) மாறும் மூலதன -- சொத்து விகிதம்</td></tr>
<tr><td>27)</td><td colspan="2">வேளாண் கடன் வழங்கும் துறையின் பணிகளைக் குறிப்பிடுக.<br>• நிபுணத்துவம் பெற்ற அலுவலரை நியமித்து வேளாண் கடன் தொடர்பான அனைத்து வினாக்களையும் ஆய்வு செய்வது.<br>• மைய அரசு, மாநில அரசு, மாநிலக் கூட்டுறவு வங்கிகள், இதர வங்கிகளின் நடவடிக்கைகளில் நிபுணத்துவம் வாய்ந்த ஆலோசனைகளை வழங்குவது.<br>• ஊரகத்துறைக்குத் தகுதிவாய்ந்த நிறுவனங்கள் மூலமாக வேளாண்மைக் கடன் வழங்குவதும் ஒருங்கிணைப்பதும்.</td></tr>
</table>

www.Padasalai.Net

<table>
<tr><td colspan="3">மூன்று மதிப்பெண் வினா -- விடை</td></tr>
<tr><td rowspan="1">28)</td><td colspan="2">வணிக வங்கிகளின் கடன் உருவாக்க முறை நுட்பத்தினை எழுதுக.<br>* வங்கிக்கடன் என்பது வாடிக்கையாளர்களின் வைப்புகளிலிருந்து தேவைப்படுவோருக்கு கடன் மற்றும் முன்பணம் கொடுப்பது ஆகும்.<br>* வங்கிகள் வழங்கும் கடன்கள் பொருளாதாரத்தில் நிகரப் பணஅளிப்பினை அதிகப்படுத்தும்.<br>* ஒருவர் வங்கியில் செலுத்தும் பணம் ₹ 1000 முதல்நிலை வைப்பாக இருக்கும்<br>* ரொக்க இருப்பு விகிதமான (20% ) ₹ 200 போக ₹ 800 - ஐ விண்ணப்பிக்கும் நபருக்குக் கடனாக அளிக்கப்படும்.<br>* கடன் பணத்தை ரொக்கமாக வழங்காமல் அன்னாரின் வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்படும். இது தருவிக்கப்பட்ட வைப்பாகும்.<br>* இம்முறையில் ₹ 1000 என்ற வைப்பு ₹ 5000 ஆகப் பெருகுகின்றது.</td></tr>
<tr><td>29)</td><td colspan="2">வங்கியல்லா நிதியமைப்புகளைப் பற்றிச் சிறுகுறிப்பு தருக.<br>* முழு வங்கிக்கான உரிமம் பெறாத நிதி நிறுவனமாகும்.<br>* மைய வங்கியால் கண்காணிக்கப்படுவதில்லை.<br>* வங்கிப்பணிகளைச் செய்யாமல் நிதிப்பரிமாற்றங்களை மேற்கொள்கிறது.<br>* மக்களிடமிருந்து வைப்புகளைப் பெற்றுக்கொண்டு கடன்களையும் , முதலீட்டு நடவடிக்கைகளுக்கு நிதியுதவியும் அளிக்கின்றது.<br>* பண அங்காடியிலும் மூலதன அங்காடியிலும் செயல்படுகின்றன.<br>* பங்குச்சந்தை , இதர நிதிநிறுவனங்கள் என இருவகைப்படும்.<br>* எ.கா -- யூனிட் டிரஸ்ட் ஆப் இந்தியா, காப்பீட்டு நிறுவனங்கள்</td></tr>
<tr><td rowspan="8">30)</td><td colspan="2">கடன் கட்டுப்பாட்டு முறைகளைக் கூறுக.</td></tr>
<tr><td>கடன் அளவுக் கட்டுப்பாட்டு முறைகள்</td><td>கடன் தன்மைக் கட்டுப்பாட்டு முறைகள்</td></tr>
<tr><td>1. வங்கி விகிதக்கொள்கை</td><td>1. கடன் பங்கீடு</td></tr>
<tr><td>2. வெளி அங்காடி நடவடிக்கைகள்</td><td>2. நேரடி நடவடிக்கைகள்</td></tr>
<tr><td rowspan="4">3. மாறும் ரொக்க இருப்பு விகிதம்<br>அ) ரொக்க இருப்பு விகிதம்<br>ஆ) சட்டப்படியான நீர்மை விகிதம்</td><td>3. நெறிமுறைத் தூண்டல்</td></tr>
<tr><td>4. விளம்பரப்படுத்துதல்</td></tr>
<tr><td>5. நுகர்வோர் கடனை முறைப்படுத்துதல்</td></tr>
<tr><td>6. ஈட்டுக்கடன்களில் விளிம்புநிலைத் தொகையை மாற்றுதல்</td></tr>
</table>

www.Padasalai.Net

**31)** **நபார்டின் பணிகள் யாவை?**

1. வேளாண்மை, சிறுதொழில்கள், குடிசைத் தொழில்கள், கிராமத்தொழில்கள், கைவினை மற்றும் இதர ஊரகத்தொழில்களுக்கு மறுகடனை வழங்குகிறது.
2. மாநிலக் கூட்டுறவு வங்கிகள், வட்டார ஊரக வங்கிகள், நிலவள வங்கிகள், இந்திய ரிசர்வ் வங்கி ஆகியவற்றால் ஏற்பளிக்கப்பட்ட இதர நிதிநிறுவனங்கள் ஆகியவற்றிற்கு குறுகியகால, மத்தியகால, நீண்டகாலக் கடன்களை வழங்குகிறது.
3. கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்கங்களுக்கு பங்கு முதலீட்டை வழங்க மாநில அரசுகளுக்கு 20 ஆண்டு நீண்டகாலக் கடன்களை வழங்குகிறது.
4. வேளாண்மை, ஊரக வளர்ச்சி ஆகியவற்றிற்கான பங்கு மூலதனம் அல்லது கடன் பத்திரங்களைப் பெற்றிருக்கும் நிறுவனங்களுக்கு நீண்டகாலக் கடனை வழங்குகிறது.
5. வட்டார ஊரக வங்கிகள், துவக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்களைத் தவிர்த்து அனைத்துக் கூட்டுறவு வங்கிகளையும் ஆய்வு செய்கிறது.

( ஏதேனும் மூன்று பணிகள் மட்டும் )

**32)** **இந்தியத் தொழில்நிதிக் கழகத்தின் பணிகளைக் குறிப்பிடுக.**

1. இந்திய ரூபாயிலும் வெளிநாட்டுப் பணத்திலும் நீண்டகாலக் கடன்களை வழங்குகிறது.
2. வெளியிடப்பட்ட சமஉரிமைப் பங்குகள், முன்னுரிமைப் பங்குகள், கடன் பத்திரங்கள் ஆகியவற்றிற்கு ஒப்புறுதி அளிக்கிறது.
3. சமஉரிமைப் பங்குகள், முன்னுரிமைப் பங்குகள், கடன் பத்திரங்கள் ஆகியவற்றை வாங்குகிறது.
4. இறக்குமதி செய்யப்படும் இயந்திரங்களுக்கும், இந்தியாவில் வாங்கப்படும் தொழிற்துறை இயந்திரங்களுக்குமான பணத்திற்கு உத்தரவாதம் அளிக்கிறது.
5. வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து அந்நாட்டின் பணத்தில் வாங்கப்படும் கடன்களுக்கான உத்தரவாதத்தையும் அளிக்கிறது.

( ஏதேனும் மூன்று பணிகள் மட்டும் )

**33)** **பண அங்காடியையும் மூலதன அங்காடியையும் வேறுபடுத்துக.**

| வ. எண் | பண அங்காடி | மூலதன அங்காடி |
|---|---|---|
| 1) | அதிக நீர்மைத் தன்மை கொண்ட குறுகியகாலத்தில் முதிர்ச்சியுறும் நிதிக் கருவிகளை வணிகம் செய்யும் அங்காடி | நீண்டகால நிதிக்கருவிகளை வணிகம் செய்யும் அங்காடி |
| 2) | ஒருநாள் முதல் ஓராண்டு வரை முதிர்ச்சியடையும் நிதிக்கருவிகள் கையாளப்படுகிறது | ஓராண்டிற்குமேல் முதிர்ச்சியடையும் நிதிக்கருவிகள் கையாளப்படுகிறது |
| 3) | அரசுப் பத்திரங்கள், வணிகப் பத்திரங்கள், மாற்றுச்சீட்டுகள், அயல்நாட்டுச் செலாவணி, கருவூல உறுதிச்சீட்டுகள் ஆகியன குறுகியகால நிதிக்கருவிகள் | கடன் பத்திரங்கள், சம பங்குகள், அயல்நாட்டுச் செலாவணி, முன்பேர வர்த்தகம் ஆகியன நீண்டகால நிதிக்கருவிகள் |
| 4) | இந்திய ரிசர்வ் வங்கி, வெளிநாட்டு வங்கிகள், வணிக வங்கிகள், வட்டார வங்கிகள், மேம்பாட்டு வங்கிகள் ஆகியவை பண அங்காடி நிறுவனங்கள் | தனி முதலீட்டாளர்கள், பங்குச்சந்தைகள், நிதிக்கழகங்கள், நிதி மற்றும் தொழில் நிறுவனங்கள், வங்கிகள்ஆகியவை மூலதன அங்காடி நிறுவனங்கள் |

( ஏதேனும் மூன்று வேறுபாடுகள் மட்டும் )

www.Padasalai.Net

| | |
|---|---|
| **34)** | **பணமதிப்பு நீக்கத்தின் நோக்கங்களைக் குறிப்பிடுக.**<br>1. கருப்புப் பணத்தை ஒழிப்பது<br>2. இலஞ்சத்தைத் தடுப்பது<br>3. தீவிரவாதத்திற்குப் பணம் செல்வதைத் தடுப்பது<br>4. கள்ளப்பணத்தினைத் தடுப்பது |
| **ஐந்து மதிப்பெண் வினா -- விடை** | |
| **35)** | **நாட்டின் பொருளாதார மேம்பாட்டில் வணிக வங்கிகளின் பங்கினை விளக்குக.**<br>**1. மூலதனத் திரட்சி**<br>* நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மூலதனத் திரட்சி இன்றியமையாதது.<br>* வங்கிக் கிளைகளை அதிகமாக்கி மக்களின் சேமிப்புகளை வைப்புகளாகத் திரட்டி உற்பத்தி நோக்கத்திற்காகக் கடன்களாக வழங்குகின்றன.<br>**2. கடன் உருவாக்கம்**<br>* முன்னேற்றத்திட்டங்களுக்கு அதிக நிதியைப் பெற்றுத் தருகிறது.<br>* உற்பத்தி, வேலைவாய்ப்பு, வருமானம், விற்பனை ஆகியவை ஏற்றம்பெற்று விரைவான பொருளாதார வளர்ச்சியைக் கொண்டுவருகின்றது.<br>**3. அதிக உற்பத்தித்திறன்கொண்ட முதலீட்டை நோக்கிப் பணத்தை முறைப்படுத்துதல்**<br>* வங்கிகள் உற்பத்தி நோக்கில் பணத்தினை முதலீடு செய்கிறது.<br>* முதலீட்டின் உற்பத்தித்திறன் குறைவாக உள்ள துறைக்கு வழங்கப்படும் முதலீட்டுக் கடனைக் குறைத்துக்கொண்டு அதிக உற்பத்தித்திறன் கொண்ட துறைகளுக்கு கூடுதலாக முதலீட்டுக் கடனை மடைமாற்றுகிறது.<br>**4. சரியான தொழிற்சாலைகளை ஊக்குவித்தல்**<br>* அதிகத்தேவை உள்ள பொருளை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்களுக்கு கடன்களையும் முன்பணங்களையும் வழங்குகிறது.<br>* உற்பத்தியாளர்கள் உற்பத்தி முறைகளில் புதுமையைப் புகுத்தி நாட்டு வருமானம் உயர்வதற்கு வழிசெய்கின்றனர்.<br>**5. கடனைப் பணமாக்குதல்**<br>* வணிகத்தில் எழும் குறிப்பிட்ட காலக்கடன்களை இடையிலேயே ரொக்கமாக்கித் தருவதன்மூலம் உற்பத்தியிலும் வணிக நடவடிக்கைகளிலும் சுணக்கம் ஏற்படாமல் வணிக வங்கிகள் பாதுகாக்கிறது.<br>* கடன் விற்பனையில் கடனுக்கான உத்தரவாதமாக மாற்றுச்சீட்டுகளை வங்கிகள் கழிவுசெய்வதால் வணிக நிறுவனங்கள் எந்த இடையூறுமின்றிப் பொருளாதார நடவடிக்கைகளைத் தொடர முடிகிறது.<br>**6. அரசிற்கு நிதி வழங்குதல்**<br>* தொழில் வளர்ச்சியை மேம்படுத்த அரசிற்குத் தேவைப்படும் குறுகியகால, நீண்டகாலக் கடன்களை அரசு பத்திரங்களை ஏற்பதன்மூலம் வழங்குகிறது.<br>* 2018 – 2019 ஆம் ஆண்டில் இந்திய ரிசர்வ் வங்கி தனது உபரிநிதியிலிருந்து மத்திய அரசுக்கு ₹.68,000 கோடி வழங்கியுள்ளது.<br>**7. வேலைவாய்ப்பினை உருவாக்குதல்**<br>* நிறைய எண்ணிக்கையில் கிளைகள் திறக்கப்பட்டு கடன் பெருக்கத்தால் நிறைய வேலைவாய்ப்புகள் உருவாகிறது.<br>**8. தொழில்முனைவினை ஊக்கப்படுத்துதல்**<br>* இந்தியா போன்ற வளரும் நாடுகளில் அண்மைக்காலமாக வணிக வங்கிகள் தொழில்முனைவினை ஊக்கப்படுத்திவருகிறது.<br>**(ஏதேனும் ஐந்து தலைப்புகள் மட்டும்)** |

www.Padasalai.Net

| | |
|---|---|
| 36) | **வணிக வங்கிகளின் பணிகளை விளக்குக.**<br>**I - முதன்மைப்பணிகள்**<br>**1) வைப்புகளை ஏற்றுக்கொள்ளுதல்**<br>* பொதுமக்களால் செலுத்தப்படும் வைப்புகளை ஏற்றுக்கொள்ளுதல்.<br>**அ) கேட்பு வைப்புகள்**<br>* முன்னறிவிப்பின்றி பணம் பெறும் படிவம், காசோலை, ATM மூலம் பணத்தை தனது வைப்பிலிருந்து எடுத்துக்கொள்வது.<br>* சேமிப்புக் கணக்கு, நடப்புக் கணக்கு என இருவகைப்படும்.<br>**ஆ) கால வைப்புகள்**<br>* குறிப்பிட்ட காலவரையறைவரை மீளப்பெறாமல் இருக்கும் வைப்புகளாகும்.<br>* நிலை வைப்பு, தொடர் வைப்பு என இருவகைப்படும்.<br>**2) கடன் வழங்கல்**<br>* ரொக்கக்கடன், மாற்றுச்சீட்டுத் தள்ளுபடி, மிகைப்பற்று ஆகிய முறைகளில் தனிமனிதர்கள் மற்றும் வணிகத்திற்கான கடன்களை வழங்குகின்றன.<br>**II - இரண்டாம் நிலைப்பணிகள்**<br>**1) முகமைப்பணிகள்**<br>* வங்கி வாடிக்கையாளர்களுக்கு முகவராக இருந்து செய்யும் பணிகள் முகமைப்பணிகள் எனப்படும்.<br>**அ) காசோலைகளைப் பணமாக்குதல்**<br>* காசோலைகளையும் மாற்றுச்சீட்டுகளையும் வங்கித் தீர்வகங்களின்மூலம் வசூல் செய்து கொடுக்கின்றன.<br>**ஆ) வருமானத்தைப் பெறுதல்** -- * இலாப ஈவு, ஓய்வூதியம், சம்பளம், வாடகை, வட்டி ஆகியவற்றினை வசூலித்துத் தருகின்றன.<br>**இ) செலவுகளைச் செலுத்துதல்**<br>* தொலைபேசிக் கட்டணம், காப்பீட்டுக் கட்டணம், கல்விக் கட்டணம், வாடகைக் கட்டணம் ஆகிய செலவுகளைச் செலுத்துகின்றன.<br>**2) பொதுப் பயன்பாட்டுப்பணிகள்**<br>அ) பாதுகாப்புப் பெட்டக வசதி<br>* நகைகள், பங்குகள், கடன் பத்திரங்களைப் பாதுகாக்க, திருட்டு, இழப்புகளைத் தவிர்க்க பாதுகாப்புப் பெட்டக வசதியைச் செய்து தருகின்றன.<br>**ஆ) பயணக்காசோலைகளை வழங்குதல்** -- * பயணக் காசோலைகள் மூலம் வெளிநாட்டுப் பயணத்தின்போது பணப்பாதுகாப்பினை வழங்குகின்றன.<br>**இ) அயல்நாட்டுச் செலாவணியைக் கையாளுதல்**<br>* ஏற்றுமதி, இறக்குமதியில் ஈடுபடும் வணிகர்களுக்கு அயல்நாட்டுச் செலாவணி வசதியைச் செய்துகொடுக்கிறது.<br>**3) நிதி மாற்றுதல்**<br>* வரைவுக் காசோலைகள், தொலைபேசி, மின்னணுப் பரிமாற்றங்கள்மூலம் ஒரு வங்கியிலிருந்து மற்றொரு வங்கிக்கு நிதியை மாற்றுகிறது.<br>**4) கடன் உறுதியளிப்புக் கடிதம்**<br>அ) பத்திரங்களுக்கு எழுத்துறுதி வழங்குதல்<br>* பத்திரங்களுக்கான எழுத்துறுதி வழங்கும் பணியினைச் செய்கிறது.<br>ஆ) மின்னணு வங்கிமுறை<br>* மின்னணுமுறையைப் பின்பற்றி பற்று அட்டை, கடன் அட்டை, இணையவழி மூலம் விரைவான பணப்பரிவர்த்தனைகளைமேற்கொள்கின்றன. |

www.Padasalai.Net

37)

**இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகளை விவரிக்க.**

**1) பண அதிகார அமைப்பு** **( ஏதேனும் ஐந்து பணிகள் மட்டும் )**

* பண அளிப்பினைக் கட்டுப்படுத்துவதன்மூலம் அயல்நாட்டுச் செலாவணிப் பரிமாற்ற விகிதத்தை நிலைப்படுத்துதல், சாதகமான செலுத்து நிலையைப் பேணுதல், நிதி நிலைத்தன்மையை ஏற்படுத்துதல், பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துதல், வங்கியமைப்பை உறுதியாக்குதல் ஆகியவற்றைச் செய்கிறது.

**2) காகிதப் பண வெளியீடு**

* நாணயங்கள் மற்றும் ஒரு ரூபாய் காகிதப் பணத்தைத் தவிர அனைத்துக் காகிதப் பணத்தையும் வெளியிடுகிறது.
* பண அளவுகளையும், கடன் அளவுகளையும் மேலாண்மை செய்கிறது.
* போலிப் பணத்தினைக் கட்டுப்படுத்துகிறது.

**3) வங்கி உரிமங்கள் வழங்குபவர்**

* வங்கிகள் முறைப்படுத்தும் சட்டம் , பிரிவு 22-இன்படி வணிக வங்கிகளுக்கு வங்கித்தொழில் செய்ய உரிமம் வழங்குகிறது.

**4) அரசுக்கான வங்கி**

* மத்திய, மாநில அரசுகளுக்கு குறுகியகாலக் கடன்களையும், வங்கி, நிதி தொடர்பான ஆலோசனைகளையும் வழங்குகிறது.
* அரசுக் கடன்கள், அரசுக் கடன் தெடர்பான சேவைகள், கடன் பத்திரங்களை உருவாக்கி விற்பனை செய்தல் ஆகிய பணிகளைச் செய்கிறது.

**5) வங்கிகளின் வங்கி**

* வங்கிகளுக்கு வேண்டிய கடன்களை அளிக்கிறது.
* வைப்புகளை ஏற்கிறது. மாற்றுச்சீட்டுகளைத் தள்ளுபடி செய்கிறது.
* அனைத்து வங்கிகளின் தலைமை வங்கியாகச் செயல்படுகிறது.

**6) கடைநிலைக் கடன் ஈவோன்**

* வணிக வங்கிகளுக்கு தீர்க்க இயலாத நிதிச்சிக்கல்கள் ஏற்படும்பொழுதும், நிதிக்கான ஆதாரங்கள் இல்லாதபோதும் ஈட்டுக்கடனை அளிக்கிறது.

**7) தீர்வாகச் செயல்படுகிறது**

* வங்கிகளுக்கிடையே நடக்கும் பரிமாற்றங்களைத் தனது 14 தீர்வகங்களால் சமன்செய்கிறது.
* பரிமாற்றக் கருவிகளைப் பரிமாறிக்கொள்ள உதவுவதுடன், பரிமாற்றம் தொடர்பான அறிவுறுத்தல்களையும் வழங்குகிறது.

**8) அயல்நாட்டுச் செலாவணிப் பாதுகாவலன்**

* அயல்நாட்டுச் செலாவணி மேலாண்மைச்சட்டம் 1999 (FEMA) -இன்படி அயல்நாட்டுச் செலாவணியை மேலாண்மை செய்வதோடு இருப்புக்களையும் பாதுகாக்கிறது.
* இந்திய ரூபாயின் பரிமாற்ற விகிதத்தை நிலைப்படுத்த வெளிநாட்டுப் பணங்களை வாங்கி விற்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுகிறது.

**9) பொருளாதாரத்தை நெறிப்படுத்துகிறது**

* பணவியல் கொள்கையை அடிப்படையாகக்கொண்டு பொருளாதாரத்தை நெறிப்படுத்தி விரும்பத்தகுந்த பாதையில் கொண்டுசெல்கிறது.
* நாட்டு வருமானம், வேலைவாய்ப்பு, செலவு, சேமிப்பு, முதலீடு போன்ற குறியீடுகளைத் தொடர்ந்து கண்காணித்து நெறிப்படுத்துகிறது.

**10) அரசின் கடன் பத்திரங்களை நிர்வகிக்கிறது**

* குறிப்பிட்ட விழுக்காட்டுச் சொத்துக்களையும் பொறுப்புகளையும் அரசின் கடன் பத்திரங்களாகக் கொண்டுள்ள நிறுவனங்களைக் கண்காணிக்கிறது.

www.Padasalai.Net

38) பணவியல் கொள்கையின் நோக்கங்கள் யாவை? விளக்குக.

1) பணத்தின் நடுநிலைத்தன்மை

* பணவியல் அதிகாரஅமைப்பு பொருளாதாரத்தில் பணம் நடுநிலைத்தன்மை நோக்கம் கொண்டதாக இருக்கவேண்டும் என்று விக்ஸ்டெட், ஹேயக், ராபர்ட்சன் ஆகியோர் வலியுறுத்தினர்.
* பணத்தில் ஏற்படும் மாற்றமே பொருளாதார ஏற்றத்தாழ்வுகளுக்குக் காரணம்.
* பணவியல் மாற்றங்கள் சரியான பாதையில் சென்றுகொண்டிருக்கும் நாட்டின் பொருளாதார அமைப்பில் விலகலையும் இடையூறுகளையும் ஏற்படுத்தும்.

2) பரிமாற்றவீத நிலைத்தன்மை

* பொன்திட்டம் அமலில் இருந்த காலத்தில் இது முக்கியமான நோக்கமாகும்.
* நாட்டின் செலுத்துச் சமநிலையில் சமனற்றநிலை தோன்றும்போது தங்க நகர்வின் காரணமாக உள்வரும்போது பணமும் கடனும் விரிவடைந்தும் வெளிச்செல்லும்போது பணமும் கடனும் சுருங்கியும் தானாகச் சரிசெய்துகொள்கிறது.

3) விலை நிலைத்தன்மை

* விலை நிலைத்தன்மையை ஏற்படுத்துவது பணவியல் கொள்கையின் முக்கிய நோக்கம் என்று பொருளியலாளர்கள் காஸல், கீன்ஸ் கூறினர்.
* விலை நிலைத்தன்மை பொதுமக்களிடமும் வணிக நடவடிக்கைகளிலும் நம்பிக்கையை ஏற்படுத்தி, பொது அலையும் சமுதாய நலனும் நிறுவப்படும்.
* மிதமான விலையேற்றம் பொருளாதாரவளர்ச்சியின் ஊக்கசக்தியாக இருக்கும்.

4) முழுவேலைவாய்ப்பு

* வேலைவாய்ப்பின்மை சமுதாய அளவில் அபாயகரமானதும், பொருளாதார அளவில் வீணடிப்பையும், அறநெறியளவில் வருந்தத்தக்கதாகவும் இருந்தது
* 1936-இல் வெளியிடப்பட்ட " வேலைவாய்ப்பு, வட்டி மற்றும் பணத்திற்கான பொதுக்கோட்பாடு " என்ற கீன்சின் நூல் முழுவேலைவாய்ப்பு என்ற பணவியல் கோட்பாட்டின் குறிக்கோளை முன்னிலைப்படுத்தியது.

5) பொருளாதார வளர்ச்சி

* நீண்டகாலத்தில் உண்மை தலா வருவாய் அதிகரித்துச் செல்லும் நடவடிக்கையே பொருளாதார வளர்ச்சியாகும்.
* சமநிலைப் பண அளவு, உற்பத்தி அளவுகள், சாதகமான சேமிப்பு - முதலீடு ஆகிய சூழ்நிலைகளைப் பராமரித்து நீடித்த பொருளாதார வளர்ச்சியினை ஏற்படுத்துவது பணவியல் கொள்கையின் குறிக்கோளாகும்.
* தேவை -- அளிப்பு சமநிலையை ஏற்படுத்த பணவியல் கொள்கை ஒரு சிறந்த வழிமுறையாகும்.

6) அயல்நாட்டுச் செலுத்துச் சமநிலையில் சமநிலையைப் பேணுதல்

* உலகப் போர்களுக்குப் பிறகு உலக வணிகத்தில் சமனற்றநிலை அதிகரித்து அயல்நாட்டுச் செலாவணியில் பற்றாக்குறை ஏற்பட்டது.
* குறைவளர்ச்சி நாடுகள் தங்களுடைய இறக்குமதியைக் குறைப்பதால் பாதகமான பொருளாதார நிலைக்குத் தள்ளப்படுகிறது.
* பணவியல்கொள்கை செலுத்துச்சமநிலையில் சமநிலையைப் பேணுவதை தனது குறிக்கோளாகக் கொண்டிருக்கிறது.

( ஏதேனும் ஐந்து நோக்கங்கள் மட்டும் )

www.Padasalai.Net